E.S.I DISPENSARY
DATE
4.VKOML

**திருநெல்வேலி மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் (பொ) (தொ.அ.ஈ.தி)**
**அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை: மரு.க.குமரமுருகன், எம்.பி.பி.எஸ்,டி.சி.எச்.,**

ந.க.எண்.4473/நி3/2022 நாள்: 25 .02.2023.

பொருள்: நிர்வாகம் - மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் அலுவலகம், தொ.அ.ஈ.தி., திருநெல்வேலி - திரு.ரா.கலைச்செல்வன், இளநிலை உதவியாளர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், சங்கரன்கோவில்- 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி - IV தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியில் இணைந்தது - தற்காலிக பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் ந.க.எண்.2383/PSD-12/2020 நாள்.21.07.2020.
2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் அவர்களின் ந.க.எண்.31495/நி2/2/2020 நாள்.05.08.2020.
3. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்(தொ.அ.ஈ)அவர்களின் ந.க.எண்.10378/ தொ.அ.ஈ/நி2/ 1/2020 நாள்.28.08.2020.
4. மண்டல நிர்வாக மருத்தவ அலுவலர், கோயம்புத்தூர்-05 அவர்களின் கடித ந.க.எண்.5419/நி2/2020-3 (வ.எண்.281) நாள்.10.09.2020.
5. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அவர்களின் கடித ஒ.மு.எண். 046056/நி2/2/2022 நாள்.14.09.2022.

**ஆணை:**

திருநெல்வேலி மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சங்கரன்கோவில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ரா.கலைச்செல்வன் என்பவர், கடந்த 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டிற்குட்பட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தொகுதி-IV ல் அடங்கிய தேர்வு வாயிலாக தேர்வு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக பணியமர்த்தம் செய்யப்பட்டு 17.09.2020 முற்பகல் அரசுப்பணியில் இணைந்தார். தனியர் அரசுப்பணியில் இணைந்த நாளான 17.09.2020 முற்பகல் முதல் தனியரின் தற்காலிகப்பணியானது வரன்முறைப்படுத்தப்படுகிறது.

தனியரது பணி வரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலத்தினை தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயித்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

நடைமுறையில் உள்ள பணிவிதிகளின்படி தமது தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு மருத்துவ விதித்தொகுப்பு (Tamil Nadu Medical Code) தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் பவானிசாகர் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சியினை முடித்து அதற்கான தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்(பொ),
(தொ.அ.ஈ.தி), திருநெல்வேலி.

பெறுநர்:

திரு.ரா.கலைச்செல்வன், இளநிலை உதவியாளர்,
தொ.அ.ஈ மருந்தகம், சங்கரன்கோவில்.(பொறுப்பு மருத்துவ அலுவலர் மூலமாக)

நகல்:

பொறுப்பு மருத்துவ அலுவலர், தொ.அ.ஈ மருந்தகம், சங்கரன்கோவில். ( சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.)

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.:

1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ), சென்னை-06.
2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை-06.